# 21.10.2019

மன்றப்பொருள்..1

2017-2018ம் ஆண்டிற்கான நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையில் மானியக் கோரிக்கையின் போது உள்ளாட்சிப் பகுதிகளில் அனைத்து தரப்பு மக்களும் பயனறும் வகையில் அனுமதி பெற்ற மனைப்பிரிவுகளில் 2500 சதுர அடிக்கு மேற்படாத மனையில் 1200 சதுர அடி பரப்பளப்பிற்குள் கட்டப்படும் குடியிருப்பு கட்டிடங்கள் கள ஆய்வு இன்றி எளிய முறையில் ஆவணங்களின் அடிப்படையில் இணையதளம் வாயிலாக கட்டிட அனுமதி மற்றும் திட்ட அனுமதி வழங்குவதற்கு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி1)துறை அரசாணை எண். 110 நாள். 21.08.2019ல் வெளியிடப்பட்டுள்ளது, மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு

பதிவு செய்யலாம்.

தீர்மானம் எண். 179

பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.

மன்றப்பொருள்..2

தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019னை அரசாணை நிலை எண். 18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MA1) நாள் 04.02.2019ல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டு அதனை தமிழ்நாடு அரசு அரசிதழில் எண். 43 நாள் 04.02.2019ல் வெளியிடப்பட்டுள்ளது அதில் விதி எண்.30(1) மற்றும் (2)ல் நகராட்சி பகுதிகளில் தொடர் கட்டுமான பகுதிகள் (Continuous Building Area) மற்றும் பொருளாதார நலிவடைந்தோர் பகுதி (EWS) சர்வே எண்கள் தனிதனியாக பிரிக்கப்பட்டு அதன் விபரம் நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்க மன்றத்தின் இசைவு வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் இசைவு அளிக்கலாம்.

தீர்மானம் எண். 180

அனுமதி வழங்கப்படுகிறது.

மன்றப்பொருள்..3

தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019ன் விதி 14ல் திட்ட அனுமதி அல்லது கட்டிட அனுமதி 5 ஆண்டுகள் மற்றும் ஒரு முறை கால நீட்டிப்பு காலம் 3 ஆண்டுகள் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. எனவே, முதலில் கட்டிடம்

நிலையில் உள்ளது. மேலும், தடுப்புச்சுவர், Polishing Pond, Administrative building, உரக்கிடங்கு மற்றும் சேகரிப்பு தொட்டி ஆகிய பணிகள் தொடங்க வேண்டிய நிலையில் உள்ள இடங்களில் உள்ள சுமார் 7300 ச.மீட்டர் பரப்பளவில் திடக்கழிவுகள் பரவி கிடப்பதால் மேற்கண்ட பணி மேற்கொள்ள மிகவும் சிரம்மாக உள்ளது. எனவே, மேற்படி திடக்கழிவுகளை இலத்தூர் சாலை உரக்கிடங்கிற்கு டிப்பர் லாரி மற்றும் ஜே.சி.பி. இயந்திரம் மூலம் மாற்றுவதற்கு ரூ. 9.60 லட்சத்திற்கு தயார் செய்ய மதிப்பீட்டிற்கும், மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதனநிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு..

1.மேற்படி கசடு கழிவு சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி அரசின் திட்டப்பணியாக இருப்பதால் குறிப்பிட்ட காலகெடுவுக்குள் பணி செய்து முடிக்கப்படவேண்டும் என்பதால் மேற்படி மதிப்பீட்டிற்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

2.மேற்படி செலவினம் ரூ. 9.60 லட்சத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதனநிதியில் மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

தீர்மானம் எண். 177

அனுமதிக்கப்படுகிறது.

மன்றப்பொருள்..7.

செங்கோட்டை நகராட்சி கே.சி.சாலையில் உள்ள நீர்த்தேக்க நிலைய வளாகத்தில், இயக்குதல் மற்றும் பராமரிப்பு மற்றும் இடைவெளி நிரப்புதல் திட்டம் 2014-15ன் கீழ் ரூ. 66.00 லட்சம் மதிப்பீட்டில் 4.00 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி அமைக்கப்பட்டது. மேற்படி மதிப்பீட்டில், வால்வு தொட்டிகள், வால்வு தொட்டி முடிகள், மும்முனை மின்சார இணைப்பு அமைத்து மின் வசதி செய்தல், கேட் அமைத்தல், நீர்த்தேக்கத் தொட்டிக்கு வர்ணம் பூசுதல், மின் மோட்டார் பம்பு அமைத்தல் மற்றும் நீரேற்றும் குழாய், விநியோக குழாய் பொருத்துதல் ஆகிய பணிகள் இல்லாத காரணத்தால், கூடுதலாக ரூ. 18.50 லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, நகர்மன்ற தீர்மான எண். 74 நாள். 30.05.2017-ல் ஒப்புதல் வழங்கப்பட்டு, ஒளிமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, 26.07.2017 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு, நகர்மன்ற தீர்மான எண். 111 நாள். 31.07.2017ல் ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப்பட்டு பணி உத்திரவு வழங்கப்பட்டு, பணி முழுவதுமாக முடிக்கப்பட்டு தற்போது பயன்பாட்டில் இருந்து வருகிறது.

இப்பணிக்கு ஒப்பந்தத்தாரருக்கு வழங்க வேண்டிய ரூ. 18.50 லட்சம் நகராட்சியில் போதிய நிதி ஆதாரம் இல்லாத காரணத்தால் வழங்க இயலவில்லை. எனவே, மேற்படி ரூ. 18.50 லட்சத்தை குடிநீர் வைப்பு நிதியில் இருந்து, குடிநீர் பராமரிப்பு வரவு நிதிக்கு நிதி மாற்றம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக்குறிப்பு..

தற்போது நகராட்சி நிதி ஆதாரம் இல்லாத காரணத்தால் ரூ. 18.50 லட்சத்தை குடிநீர் வைப்புத் தொகை நிதியிலிருந்து, குடிநீர் பராமரிப்பு வரவு நிதிக்கு மாற்றம் செய்ய மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

தீர்மானம் எண். 178

அனுமதிக்கப்படுகிறது.

பொருள் (பூம்புகார்) மூலம் கொள்முதுல் செய்திட திருத்திய நெறிமுறையுடன் வழங்கப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிக்கும் வைக்கப்படுகிறது.
(ந.க.எண். 2273/2014/சி1)

அலுவலக்குறிப்பு..

1.அரசாணை நிலை எண். 114, பணியாளர் மற்றும் நிர்வாகசீர்திருத்த துறை அரசாணையினை மன்றம் பதிவு செய்யலாம்.

2. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களது கடிதம் ந.க.எண். 4980/2018/ஜே3, நாள் 12.07.2019 மன்றம் பதிவு செய்யலாம்.

3. இதற்குரிய செலவினத்திற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
தீர்மானம் எண். 175

அங்கீகரிக்கப்படுகிறது.

மன்றப்பொருள்..5

செங்கோட்டை நகராட்சிக்கு எதிராக செங்கோட்டை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட கீழ்க்கண்ட வழக்குகளில் நகராட்சிக்கு சாதகமாக தீர்ப்பாகியுள்ளது. அதற்கு நகர்மன்ற வழக்கறிஞர் திரு.எஸ்.கிருஷ்ணமூர்த்தி B.Com.,B.L., அவர்களுக்கு வழக்கறிஞர் கட்டணம் மொத்தம் ரூ. 9640/-(ரூபாய் ஒன்பதாயிரத்திஅறுநூற்றி நாற்பது) மட்டும வழங்கலாம்.

1. வழக்கு எண். ஓ.எஸ்.எண். 137/2006 ரூ. 2355/-
2. வழக்கு எண். ஓ.எஸ்.எண். 140/2006 ரூ. 2355/-
3. வழக்கு எண். ஓ.எஸ் எண். 12/09 ரூ. 2870/-
4. வழக்கு எண் ஓ.எஸ்.எண். 118/09 ரூ.2060/-

அலுவலக்குறிப்பு..

மேற்கண்ட வழக்கறிஞர் கட்டணம் ரூ. 9640/-யை (ரூபாய் ஒன்பதாயிரத்து அறுநூற்றி நாற்பது மட்டும்) நகர்மன்ற வழக்கறிஞர் திரு.எஸ்.கிருஷ்ணமூர்த்தி B.Com.,B.L அவர்களுக்கு வழங்க அனுமதிக்கலாம்..
(ந.க.எண். 2427/06/எப்1)

தீர்மானம் எண். 176

அனுமதிக்கப்படுகிறது

மன்றப்பொருள்..6

செங்கோட்டை நகராட்சி வல்லம் சாலையில் உள்ள உரக்கிடங்கில் ரூ. 260.00 லட்சம் மதிப்பீட்டில் கசடு கழிவு சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டு வருகிறது. தற்போது Screening chamber, Digester, Sludge drying bed, Anaerobic filter , Horizontal gravel filter ஆகிய பணிகள் முடிவுறும்

மன்றப்பொருள்..4

செங்கோட்டை நகராட்சி தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள இரண்டு 30 எச்.பி. நீர்முழ்கி மின்மோட்டாரில் ஒரு மின் மோட்டார் பழுதாகி உள்ளதால், ஒரு மின் மோட்டார் மட்டுமே இயக்கப்பட்டு குடிநீர் விநியோகம் வழங்கப்பட்டு வருகிறது. இந்த பழுதடைந்த மின் மோட்டார் வாங்கப்பட்டு 10 வருடங்களுக்கு மேல் ஆகிறது. மேலும் அதன் ஸ்டார்டரும் பழுதாகி உள்ளதால், மின் மோட்டார் மற்றும் ஸ்டார்டர் ஆகியவைகளை பழுது நீக்கி இய்க்க ரூ. 1.10 லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளதற்கும், மேற்படி செலவினத்தை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் மேற்கொள்ளவும், மன்றத்தின் ஒப்புதலும், மேற்படி குடிநீரின் அவசிய அவசரம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு 29.08.2019 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.லட்சத்தில்) | ஒப்பந்தக்காரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | செங்கோட்டை தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள 30 எச்.பி.சப்மெர்சிபில் மின் மோட்டார் பழுது நீக்குதல் பணி மேற்கொள்ள | ரூ. 1.10 | ரோக்கால் அன் கோ, மதுரை | 1.51% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | ஆனந்தா எண்டர்பிரைசஸ், மதுரை | 5.96% மதிப்பீட்டை விட கூடுதல் |

அலுவலக்குறிப்பு..

1. மேற்படி மின் மோட்டார் பழுது நீக்குவதற்கும், ரூ. 1,10 லட்சத்தை குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் மேற்கொள்ளவும் ஒப்புதல் வழங்கலாம்.

2. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்தபட்ச விலைவிகிதமாக மதிப்பீட்டை விட 1.51% குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள மெஸர்ஸ்,ரோக்கால் அன் கோ என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளிக்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

தீர்மானம் எண் 174

குறைந்த ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப்பட்டது.

மன்றப்பொருள்..5

செங்கோட்டை நகராட்சியில் பொதுசுகாதாரபிரிவில் ஓட்டுநர் பணியிடத்தில் 20 ஆண்டுகள் விபத்தில்லா மாசற்ற முறையில் பணியாற்றிய ஓட்டுநர் திரு.கே.சேஷன், தங்கபதக்கம் வழங்கிட நகர்மன்ற தீர்மான எண். 97, நாள். 15.11.2018 ன் படி அனுமதி பெறப்பட்டிருந்த்து. இந்நிலையில் அரசாணை நிலை எண். 114 பணியாளர்(ம) நிர்வாக சீர்திருத்த துறை நாள். 19.05.1998ன் படி மேற்படி தங்கப்பதக்கமானது தமிழ்நாடு கைவினை

(திடக்கழிவு மேலாண்மை மற்றும் கட்டிடம்) சீர்மிகு சென்னை மாநகராட்சி அவர்களிடம் ஒப்படைக்க உத்திரவு வழங்கப்பட்டுள்ளது மன்றத்தின் இசைவு வேண்டப்படுகிறது.

அலுவலக்குறிப்பு..

1. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை மன்றம் பதிவு செய்யலாம்.
2. மன்றம் இசைவு வழங்கலாம்.

தீர்மானம் எண். 172

ஒப்புதல் அளிக்கப்பட்டது.

மன்றப்பொருள்..3

செங்கோட்டை நகராட்சி காலாங்கரை பகுதியில் உள்ள சிதிலமடைந்த அங்கன்வாடி கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்தி புதிதாக அங்கன் வாடி கட்டிடம் கட்டுதல் பணி மேற்கொள்ள, 2018-19ம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கடையநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் பரிந்துரை செய்யப்பட்டதன் அடிப்படையில், திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் தலைவர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அவர்களின் செயல்முறை ஆணை எண். ந.க.எண். அ8/4193/2018 நாள். 14.07.2019ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

மேலும், மேற்படி அங்கன்வாடி கட்டிடம் அமைப்பதற்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு வழங்கப்பட்டு 02.08.2019 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் வருமாறு

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. லட்சம்) | ஒப்பந்தப்புள்ளி தாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | செங்கோட்டை நகராட்சி காலாங்கரை பகுதியில் உள்ள சிதிலமடைந்த அங்கன்வாடி கட்டிடத்தை இடித்து புதிதாக அங்கன் வாடி கட்டிடம் கட்டுதல் | ரூ. 9.70 | திரு.தா.ஆபேல்ஜெயசீலன் | 0.032% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | திரு.எஸ்.பரமசிவன் | 0.057 % மதிப்பீட்டை விட கூடுதல் |

அலுவலககுறிப்பு..

மேற்படி பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்தபட்ச விலைவிகிதமாக 0.032% மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு.தா.ஆபேல்ஜெயசீலன் என்பவருடைய ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புதல் வழங்க்லாம்

தீர்மானம் எண். 173

குறைந்த ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப்பட்டது.

## 17.09.2019

மன்றப்பொருள்..1

நகராட்சி அலுவலக ஈப்பு வாகனம் எண். TN 76 AA 1237-க்கு குளிர்சாதனம் இயந்திரம் பொருத்த நகர்மன்ற தீர்மானம் எண். நாள். 18.07.2019ன் கீழ் ஒப்புதல் வழங்கப்பட்டு, 18.07.2019 விலைப்புள்ளி கோரப்பட்டு 26.07.2019 அன்று பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் விவரம் வருமாறு

| வ. எண் | பணியின் விவரம் | மெஸர்ஸ். கூல் கேர், தெற்கு புறவழிச்சாலை, திருநெல்வேலி | அருள் கூல் ஸ்பேர்ஸ், பாளையங்கோட்டை ரோடு, திருநெல்வேலி |
|---|---|---|---|
| 1 | நகராட்சி அலுவலக ஈப்பு வாகனம் (BOLERO) எண். TN76 AA 1237க்கு குளிர்சாதன இயந்திரம் விநியோகம் செய்து பொருத்தும் பணி மேற்கொள்ள | ரூ. 46600/- | ரூ.48700/- |

மேற்கண்ட இரண்டு விலைப்புள்ளிகளில் குறைந்த பட்ச விலைவிகிதமாக ரூ. 46600/-க்கு விலைப்புள்ளி வழங்கியுள்ள மெஸர்ஸ். கூல் கேர், தெற்கு புறவழிச்சாலை, திருநெல்வேலி நிறுவனத்தின் விலைப்புள்ளிக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு

குறைந்தபட்ச விலைவிகிதமாக ரூ. 46600/-க்கு விலைப்புள்ளி வழங்கிய நிறுவனம் கூல்கேர்,திருநெல்வேலி என்பவருக்கு ஒப்புதல் வழங்கலாம்.

தீர்மானம் எண். 171

அங்கீகரிக்கப்பட்டது

மன்றப்பொருள்..

2வது மாநில உயர்மட்ட குழு தீர்மானம் நாள்.28.10.2015ல் செங்கோட்டை நகராட்சிக்கு தூய்மை இந்தியாத் திட்டம் 2015-2016ன் கீழ் திடக்கழிவு மேலாண்மை பணிக்காக, ரூ. 34.00 லட்சம் மதிப்பீட்டில் காம்பேக்டர் வாகனம் மற்றும் காம்பேக்டர் பின்கள் 26 எண்ணம் கொள்முதல் செய்யப்பட்டு, திடக்கழிவு மேலாண்மை பணிக்காக பயன்பாட்டில் இருந்துவந்தது.

தற்போது 7 வது மற்றும் 8 வது மாநில உயர்மட்ட குழு தீர்மானத்தில் திடக்கழிவுத் திட்டத்திற்காக மூன்று நுண்ணுயிர் உரக்குடில்கள் மற்றும் 13 பேட்டரி வாகனங்களும், 2 இலகுரக வாகனங்களும் அனுமதிக்கப்பட்டு இவைகள் மட்டுமே பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதனால் காம்பேக்டர் வாகனம் பயன்பாட்டில் இல்லை.

மேலும், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண். 23562/2019/பி3 நாள். 26.09.2019-ல் மேற்படி காம்பேக்டர் வாகனம் (வாகனம் எண். TN 76 AE 2986 மற்றும் 26 காம்பேக்டர் பின்களை தலைமை பொறியாளர்

மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு..

வரப்பெற்ற 3 விலைப்புள்ளிகளில் குறைந்தபட்ச விலைவிகிதம் வழங்கியுள்ள ராம் எண்டர்பிரைசஸ் நிறுவனத்தின் விலைப்புள்ளிக்கு ஒப்புதல் வழங்கலாம்.

தீர்மானம எண் 169

அனுமதி வழங்கப்பட்டது.

மன்றப்பொருள்..11

செங்கோட்டை நகராட்சி அலுவலக ஜீப் வாகனம் எண். TN 76 AA 1237 தற்போது நல்ல நிலையில் அலுவலக பயன்பாட்டில் இருந்து வருகிறது. அலுவலக பணி தொடர்பாக நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மற்றும் பிற அலுவலகத்திற்கும், உயர்நீதி மன்ற மதுரை கிளை போன்ற இடங்களுக்கும் அடிக்கடி அலுவலக பணி தொடர்பாக சென்று வரப்படுகிறது என்பதால், நிர்வாக நலன் கருதி இந்த வாகனத்திற்கு குளிர் சாதனம் வசதி மேற்கொண்ட்டிடவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ. 50000/-ஐ நகராட்சி வருவாய் மற்றும் மூலதனநிதியில் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
2. மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதனநிதியில் மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

தீர்மானம் எ.ண 170

அனுமதி வழங்கப்பட்டது.

| | தார் சாலையில் உள்ள கட்டிடங்களுக்கு குடிநீர் இணைப்பு வழங்க | குடியிருப்பு கட்டிடங்கள் | குடியிருப்பு இல்லாத கட்டிடங்கள் |
|---|---|---|---|
| 1 | வைப்புத் தொகை | ரூ. 5000/- | ரூ. 10000/- |
| 2 | மதிப்பீட்டு கட்டணம் | ரூ. 3576/- | ரூ. 3576/- |
| 3 | சாலை பராமரிப்பு கட்டணம் | ரூ. 3666/- | ரூ. 3666/- |
| 4 | மேற்பார்வை கட்டணம் | ரூ. 750/- | ரூ. 750/- |
| | மொத்தம் | ரூ. 12992/- | ரூ. 17,992/- |

மேற்கண்ட கட்டணங்களை 10 சமதவணைகளாக பிரித்து 6 மாதங்களுக்கு ஒருமுறை சொத்துவரியுடன் வசூல் செய்யவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு..

மேற்கண்ட கட்டணத்தை நிர்ணயம் செய்ய மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

தீர்மானம் எண். 168

அனுமதி வழங்கப்பட்டது.

மன்றப்பொருள்..10

செங்கோட்டை நகராட்சி பகுதியில் 29.05.2019 அன்று பொழிந்த மழை பொழிவினால் ஏற்பட்ட மின்னல் இடியின் காரணத்தினால் பழுதடைந்த 26 குழல் விளக்குகள் மற்றும் 6 சோடியம் ஆவி விளக்குகள் பழுது நீக்கம் செய்ய அனுமதி அதற்காகும் செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதனநிதியில் மேற்கொள்ளவும், மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி விலைப்புள்ளி கோரப்பட்டு வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல்

| வ. எண் | பணியின் விவரம் | ஸ்டார் எலக்ட்ரிகல்ஸ், தென்காசி | இப்ராஹிம் எலக்ட்ரிகலஸ, தென்காசி | ராம் எண்டர்பிரைசஸ், நாகர்கோவில் |
|---|---|---|---|---|
| 1 | 150வாட்ஸ் சோடியம் ஆவி விளக்கு சோக் (ஒன்றுக்கு) | ரூ.1860/- | ரூ.1850/- | ரூ.1760/- |
| 2 | 150 வாட்ஸ் சோடியம் ஆவி பல்பு(ஒன்றுக்கு) | ரூ.410/- | ரூ.410/- | ரூ.350/- |
| 3 | 150 வாட்ஸ் இக்னிட்டர் (ஒன்றுக்கு) | ரூ 295/- | ரூ 295/- | ரூ 210/- |
| 4 | சோடியம் கண்டன்சர் (ஒன்றுக்கு) | ரூ. 420/- | ரூ. 410/- | ரூ. 280/- |
| 5 | 40 வாட்ஸ் சோக் (ஒன்றுக்கு) | ரூ.195/- | ரூ.192/- | ரூ.170/- |
| 6 | 40 வாட்ஸ் டியூப் லைட் (ஒன்றுக்கு) | ரூ.42/- | ரூ.41/- | ரூ.40/- |
| 7 | 40 வாட்ஸ் ஸ்டார்டர் (ஒன்றுக்கு) | ரூ. 12/- | ரூ. 10/- | ரூ. 10/- |
| 8 | 40 வாட்ஸ் ஹோல்டர் (ஒன்றுக்கு) | ரூ. 10/- | ரூ. 9/- | ரூ. 9/- |